கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், புயல் மழையால் பாதிக்கப்பட்ட சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி, சேப்பாக்கம் பகுதி, வட்டம் 115, ராயப்பேட்டை குண்டா தெருவைச் சேர்ந்த 1500 பொதுமக்களுக்கு அரிசி, மளிகைப்பொருட்கள், போர்வை ஆகிய பொருட்களை நிவாரண உதவியாக வழங்கினார். இதில் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மண்டலக் குழுத் தலைவர் மதன்மோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.12.2023), தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் சென்னை லீலா பேலஸில் 2023 டிசம்பர் 15 முதல் 21ம் தேதி வரை நடைபெறவுள்ள சென்னை கிராண்ட் மாஸ்டர்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் 2023 போட்டியினை நடத்துவதற்கு தமிழ்நாடு அரசு வழங்கும் ரூபாய் 1.77 கோடிக்கான காசோலையை போட்டி நடத்தும் ஒருங்கிணைப்பாளர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனுள்ளனர்.

ஜனவரி 19 முதல் 24, 2024 வரை தமிழ்நாட்டில் நடைபெறவுள்ள கேலோ இந்தியா யூத் கேம்ஸ் 2023க்கான முக்கியமான ஆயத்தக் கூட்டத்திற்கு நேற்று முன்தினம் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கினார். இந்தியா முழுவதிலுமிருந்து 6000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுடன் இந்த பல்விளையாட்டு களியாட்டத்தை குறை பாடற்ற முறையில் செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கான அடிப்படைத் திட்டங்களை அதிகாரிகளுடன் அவர் விவாதித்தார்.

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் மூலம் – மயிலாப்பூர்

விவேகானந்தபுரத்தில் நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம்!

அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் - கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தனர்!

சென்னை, டிச. 15 -

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் (TUCS) மூலம் மயிலாப்பூர், சி.ஐ.டி. காலனி, விவேகானந்த புரத்தில் செயல்பட்டு வரும் நியாயவிலைக் கடைக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை நேற்று முன்தினம் (13.12.2023) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்தின் (TUCS) மூலம் மயிலாப்பூர், சி.ஐ.டி. காலனி, விவேகானந்தபுரத்தில் நியாயவிலைக் கடை வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இந்தப்பகுதி பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.28.75 இலட்சம் மதிப்பீட்டில் மயிலாப்பூர், சி.ஐ.டி. காலனி, 6ஆவது குறுக்குத் தெருவில் புதிய கட்டப்பட்டுள்ளது.

இந்த நியாயவிலைக் கடையின் மூலம் வீரபெருமாள் கோயில் தெரு, சந்த வெளி தெரு 1,2,3, பாலகிருஷ்ணா காலனி, நாகரத்தினா காலனி, பங்காரு அம்மன் கோவில் தெரு, சிதம்பர சாமி தெரு 1,2, P.S. சிவசாமி சாலை, துர்கை அம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 1567 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவார்கள். இதன் மூலம் இந்த பகுதி மக்கள் தங்கள் வசிக்கும் இடத்தின் அருகாமையிலேயே அத்தியாவசியப் பொருட்களை பெறுவது எளிதாகிறது.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி.ஆர். பிரியா, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர். ந.சுப்பையன், 119வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. வே. கமலா செழியன் உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

மிக்ஜாம் புயலினால் கடுமையாக பாதிக்கப்பட்ட சென்னை சைதாப்பேட்டை தொகுதி, அடையாற்றங் கரையோரம் வசிக்கும் சைதை கிழக்கு பகுதியைச் சார்ந்த 8,000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொருட்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் 13.12.2023 வழங்கினார். உடன் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மண்டல குழு தலைவர் இரா.துரை ராஜ், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் உள்ளிட்ட தி.மு.கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, எம்.ஏ சாகிப் தெரு & நாவலர் நெடுஞ்செழியன் நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கு மூலக்கொத்தளத்தில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் புதிய வீடுகளை வழங்குவதற்கான வீடு ஒதுக்கீட்டு ஆணைகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன், நே.சிற்றரசு, மதன்மோகன் உள்ளிட்டோர் உள்ளனர்.

சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதிக்கு உட்பட்ட சி.ஐ.டி காலனி பொதுமக்கள், அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.28.75 லட்சம் மதிப்பில், புதிய நியாய விலைக்கடையை சி.ஐ.டி காலனி 6ஆவது குறுக்குத் தெருவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், மேயர் பிரியாராஜன் மற்றும் நே.சிற்றரசு, ஏ.ஆர்.பி.எம்.காமராஜ், மதன்மோகன், ஆர்.என்.துரை, கமலா செழியன், க.வே.மோகன், லைனர் பிரபு உள்ளிட்டோர் உள்ளனர்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, திருவல்லிக்கேணி பகுதி, 120ஆவது வட்டம், முத்தையா தெருவில் வசித்து வருகின்ற பொதுமக்கள் 1200 பேருக்கு அரிசி, மளிகைப் பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். இதில் தயாநிதி மாறன் எம்.பி., நே.சிற்றரசு, ஏ.ஆர்.பி.காமராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அமைச்சர் கே.என்.நேரு தலைமையில்

சேலம் கிழக்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், டிச. 15 -

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் வருகின்ற 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மதியம் 2.00 மணி அளவில் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் கழக முதன்மை செயலாளர், நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே சேலம் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுகுழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், ஊராட்சி கிளைகழக செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தேர்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளைஞர் அணி, மாணவர் அணி உள்ளிட்ட அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

23.12.2023 அன்று கழகத் தலைவர் அவர்களின் வருகை,

24.12.2023 அன்று நடைபெறவுள்ள தி.மு.க இளைஞர் அணி 2வது மாநில மாநாடு குறித்து ஆலோசனை,

கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.